புதுச்சேரி அரசு

# தொழிலாளர் துறை

## தலைமை தொழிற்சாலைகள் மற்றும் கொதிக்கலன்கள் ஆய்வகம்

எண் : 1235/CIF&B/A7/2021

தேதி: 03-03-3021

## 50-வது தொழிற்சாலைகளுக்கான தேசிய பாதுகாப்பு வாரம்
## 04-03-2021 முதல் 10-03-3021 வரை

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விபத்துக்களை தடுக்கவும், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 4-ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு தேசிய பாதுகாப்பு வாரம், நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளால் உயிர்சேதம், பொருட்சேதம் மற்றும் பல இழப்புகள் ஏற்படுகின்றன. இதனால் தொழிலாளர்களும் தொழிற்சாலை நிர்வாகத்தினரும் பாதிக்கப்படுகின்றனர். விபத்துக்கள் நடைபெறாவண்ணம் தடுக்கவும், தொழில் சார்ந்த நோய்களைக் கட்டுப்படுத்தவும் ஒவ்வொரு தொழிற்சாலையும் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகள், போட்டிகள் நடத்தியும் மற்றும் பாதுகாப்பு படச்சுருள்கள் காண்பித்தும் தொழிலாளர்களுக்கிடேயே விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த பாதுகாப்பு வார விழாவின் நோக்கமாகும்.

எனவே, புதுச்சேரி மாநிலத்தின் செயல்படும் அனைத்து தொழிற்சாலைகளும் அவரவர் தொழிற்கூடங்களில் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த போட்டிகள் மற்றும் படக்காட்சிகள் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு தலைமை தொழிற்சாலைகள் ஆய்வகத்தால் இந்த ஆண்டு தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு பற்றிய பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சி நடத்தப்படுகிறது.. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மாண்புமிகு துணை ஆளுநர் அவர்களால் மார்ச் 10 அன்று நடைபெறும் நிறைவு விழாவின்போது பரிசும், சான்றிதழும் வழங்கி சிறப்பிப்பார்கள்.

**பேரழிவில் இருந்து கற்றுக்கொள்வோம்!**
**பாதுகாப்பான எதிர்காலத்தை கட்டமைப்போம்!**

*சுதந்திரத்தைவிட சுகாதாரமே மிக முக்கியமானது - மகாத்மா காந்தி*

**இ. வல்லவன், இ.ஆ. ப.**
தொழிலாளர் துறை செயலர் மற்றும்
தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர்